கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **114/2023**

வாதி தரப்பு சாட்சி –2 **கண்ணன்** என்பவரை செல்வி.கொ.சிவசங்கரி, தட்டச்சர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் எனக்கு விவரம் தெரிந்தது முதல் அங்கு தான் வசிக்கிறேன். நான் மேற்படி முகவரியில் குடியிருப்பதை உறுதி செய்ய ஆதார் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை நான் கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் நியாபகம் இல்லை. 2012 ம் வருடம் கிரையம் வாங்கினேன். நான் 2012 ம் வருடம் கிரையம் வாங்கிய போது வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றேனா என்றால் இல்லை.

2. நான் கிரையம் வாங்குவதற்கு முன்னர் வில்லங்க சான்றிதழை பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த மனுவில் எப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை. மேற்படி உத்தரவில் மாவட்ட பதிவாளர் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மாவட்ட பதிவாளரின் உத்தரவின் படி நான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய ஆவணமானது கடந்த 27.03.2023 அன்று இரத்தாகிவிட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி தெரியுமா என்றால் நியாபகம் இல்லை.

3. இவ்வழக்கை 15.06.2023 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 27.03.2023 ம் தேதியில் எனது கிரைய பத்திரம் இரத்தான பின்பு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மாவட்ட பதிவாளரின் உத்தரவின் படி இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால்சரியல்ல. இவ்வழக்கு

தாக்கல் செய்த சமயத்திலோ, இவ்வழக்கிற்கு முன்போ அல்லது அதன் பின்போ தாவா சொத்தின் உரிமை மற்றும் சுவாதீனம் என் வசம் இல்லை என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கு நிலைத்ததக்கதல்ல என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. 1ம் வாதியிடமிருந்து அவருக்கு உரிமையில்லாத சொத்தை தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் கிரையம் பெற்றதாக சொன்ன தேதிக்கு பிறகு உளவடை செய்தோ, வேறு வகையிலோ அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**